Issue Date: 14-11-07

வாசல்
அரசியல்
ஸ்பெஷல்-1
ஸ்பெஷல்-2
நையாண்டி
கதைகள்
சினிமா
இலக்கியம்
தொடர்கள்
சுவடுகள்
உங்கள் கருத்து
சந்தா

அறிந்தும் அறியாமலும்..! (31)

## ஞாநி

**நா**ன் யார் என்று தன்னைத்தானே மெள்ள மெள்ள ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் அறியத் தொடங்கும்போது அவர்கள் அறிகிற, உணர்கிற, ஏற்கிற, நிராகரிக்கிற எல்லா வரையறைகளும் சமூகம் ஏற்கெனவே உருவாக்கி வைத்தி-ருப்பவைதான். அந்த வரையறைகளை மீற நினைப்ப-வர்கள்கூட முதலில் அவற்றை அறிந்த பின்னரே மீற இயலும்.

உன் உடல் ஆண் உடல்; உன் உடல் பெண் உடல்; உன் உடல் அரவாணி/திருநங்கை/மூன்றாம் பாலின உடல் என்றெல்லாம் இருக்கும் வரையறைகளை அறிந்து ஏற்றுக்-கொண்டுவிடுகிறோம். ஆனால், ஒருவரின் உள்ளம்?



நம் அடையாளத்தின் ஒரு பகுதி, நம்மைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்பதாகும். நம்மைப் பற்றி மற்ற-வர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது இதன் மறுபகுதி. இந்த இரண்டுக்கும் இடையில் முரண்பாடுகள், வேறுபாடுகள் வரலாம்; வரும்.

அவற்றை எப்படி சமரசம் செய்து-கொள்-கிறோம், அவற்றில் நம்-முடன் சமூகம் எனப்-படும்

மற்றவர்கள் எப்-படி சமரசம் செய்து-கொள்-கிறார்கள் என்-பதுதான் நம் வாழ்க்-கையின் சுக துக்கங்கள் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது.

சமூகத்துடன் எந்த அளவுக்குச் சமரசம் செய்-வது, எந்த அளவுக்கு மேல் செய்ய மறுப்பது என்பது வாழ்க்கை முழுக்கவே நமக்குத் தொடரும் பிரச்னை-தான். மனிதர்கள் கூட்-டாகச் சேர்ந்து வாழத் தொடங்கிய காலத்-தில் இருந்தே இருந்துவரும் பிரச்னை இது.

Free Animated Wallpapers
Great selection of 3D wallpapers! Download them all for Free.
Wallpapers.klorine.net

Free Desktop Backgrounds
Get 1000s Of Screensavers. No Registration Required. Download now
TheTopScreenSavers.com/Deskto

Wallpaper
Huge selection of Wallpaper items.
Yahoo.com

Free Storms Wallpapers
Awesome Collection of Wallpapers, 1,000's of Choices. Free Download!
www.FunUtilities.com

Desktop Computer
Searching For Desktop Computer? Visit Our Desktop Computer Guide.
SaveLikeaProOnline.com

Screensaver & Wallpaper
Get cute & cool animated animal screensavers for free. Fun & easy!
www.PopularScreenSavers.com

Free 3D Wallpapers
Animated Wallpapers-Huge Selection All Free - No Spyware - No Viruses
www.slickwallpaper.com

Desktop Theme Wallpaper
Find Desktop Theme Wallpaper Here. Fast in the Ansearch Directory.
www.AnSearch.com

[redacted]

[redacted]

இதைத் தீர்க்க ஒவ்-வொரு கால-கட்டத்திலும் வெவ்வேறு அறிவுரை-கள் கூறப்பட்டு வருகின்-றன. ‘எத்தனை படித்-திருந்-தாலும், உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கற்றிரா-விட்டால், நீ முட்-டாள்-தான்’ என்கிறார் வள்ளு-வர். ‘வாழு; வாழவிடு’ என்-பது எல்லா காலத் திலும் பிரபலமான உபதே-சம்.

உலகம் எல்லா காலத்தி-லும் ஒரே -போல இருக்கவில்லை. அதன் வரை-யறை-களை அப்படியே ஏற்றுக்கொள்-கிறவர்கள் இருப்பது போலவே, ஏற்காமல் கேள்வி கேட்கிற-வர்களும் ஒவ்வொரு சமூகத்திலும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்த நிலை, சுயபால் விழைவில் இருக்--கும் மனிதர்களுக்கும் பொருந்-தும். சுயபால் விழைவைச் சமூகம் அங்கீ-கரிக்கலாமா, கூடா-தா என்பது பற்றி 2002-ல் ஓர் உலகளாவிய

கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அமெரிக்-கா, கனடா, மெக்ஸிகோ, ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, செக்கோஸ்லோவேகியா, ஸ்லோ-வேனியா, அர்ஜென்டினா, பொலிவியா, பிரேசில், பிலிப்பைன்ஸ், ஜப்பான் முதலிய நாடுகளில் 55 முதல் 83 சதவிகிதம் பேர் அங்கீ-காரத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், உஸ்பெகிஸ்தான், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் ஆதரவு பத்து சதவிகிதம் கூட இல்லை. இதர சில நாடுகளில் 25 முதல் 45 சதவிகிதம் வரை ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

இதில் முக்கியமான விஷயம் என்ன--வென்றால், இப்போது பெரு-வாரியாக ஆதரவு தெரிவித்த நாடுகள் எல்லாம் சுமார் 60 ஆண்டு-களுக்கு முன்பு பெருவாரியாக எதிர்ப்பு தெரிவித்தவை. கடும் நட-வடிக்கைகள் எடுத்தவை. இப்போது பத்து சத-விகிதத்துக்குக் குறைவாக ஆதரவு தெரிவித்த நாடுகளில் வர-லாற்றுரீதியாக மாற்று பாலுறவுகள் பற்றிக் கடுமையான நடவடிக்கைகள் இருந்ததாக போதுமான ஆதாரங்கள் இல்லை.

பாலுணர்வு, பாலுறவு பற்றிய சமூ-கத்தின் பார்வைக்கு அடிப்படை-யாக இருப்பது, பாலுறவின் நோக்கம் என்ன என்பதுதான்.

பாலுறவின் நோக்கம் இனப்-பெருக்-கம், இனப்பெருக்கம் மட்-டும்தான் என்-பதை ஏற்றுக் கொண்டு இருக்கிற சமூகங்கள் எல்லாம் சுயபால் விழைவைக் கடுமையாகக் கண்டிக்-கின்--றன.



பாலுறவின் நோக்கம், மகிழ்ச்சி என்ற கோணத்தில் பார்க்கும் சமூ-கங்கள், அந்த உறவு இனப் பெருக்கத்துக்குத் தேவை-யான-தாக மட்டும்தான் இருக்க வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது-இல்லை.

குழந்தை பெறும் நோக்கத்தை அடிப்படை வரையறையாக வைத்து இயங்கும் சமூகங்கள் அதற்கு ஏற்பவே தம் மொழி, பழக்க- வழக்கங்கள் எல்லா-வற்றையும் கட்டமைக்-கின்றன. பாடப் புத்தகங்கள் உடலின் வெவ்வேறு உறுப்புகளை விவரிக்கும்போது, சுவாச உறுப்புகள், ஜீரண உறுப்புகள் என்று பெயர் சூட்டும்போது, இவற்றை இனப்பெருக்க உறுப்பு-கள், ஜனனேந்திரியங்-கள், பிறப்புறுப்புகள் என்றே அழைக்கின்றன. இனப்-பெருக்-கத்துக்கு உதவாத சுயபால் உறவுகளை இந்தச் சமூகங்கள் கடுமையாகக் கண்டிக் கின்றன. எதிர் பால் உறவில் கூட குழந்தை-யற்ற மலட்டுத் தன்மை கலாசாரரீதியாக இந்தச் சமூகங்களால் கடுமையான கண்ட னத்துக்கு உள்ளாகிறது.

இந்தச் சமூகங்கள் சுய பால் விழைவை மனக் கோளாறாகக் கருதி 'குணப்படுத்த' முயற்சிக்-கின்றன.

சுய பால் விழைவை எப்படி 'குண'ப்-படுத்து-வது? பாலுறுப்புகளில் மின் அதிர்வு-கள் தருவது முதல், நடத்தை பழக்க வழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது வரை விதவிதமான முறைகள் பின்பற்றப்-படுகின்றன. இவற்றின் விளைவுகள் பற்றிய பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில், மேற்கத்திய சமூகங்களில் கடும் சர்ச்சைகள் உள்ளன.

திருத்தல் சிகிச்சை, மாற்றும் சிகிச்சை என்ற பெயரில் இன்றும் இந்தியா போன்ற நாடுகளில் இப்படிப்பட்ட சிகிச்சைகள் சில மருத்துவர்களால் அளிக்கப்படுகின்றன. சுய பால் விழைவையும் மனித இயல்புகளில் ஒன்றாக ஏற்றுக்கொண்டு இருக்கும் சமூகங் -கள், இப்படிப்பட்ட சிகிச்சை முறைகளை மருத்துவ அற நெறிக்கு விரோதமானவை-யாகக் கருதுகின்றன.

தன்னை சுய பால் விழைவுள்ளவராக ஒரு சிறுவனோ சிறுமியோ கருதத் தொடங்-கும் வயது டீன் ஏஜ்தான்! அப்போது அவர்-களுக்கு ஏற்படக்கூடிய கேள்விகள், மன உளைச்சல்கள் என்ன?

### இந்த வார ஹோம் வொர்க்:

- நீங்கள் உங்களைச் சுற்றியுள்ளவர்களான சமூகத்துடன் செய்யும் சமரசங்கள் என்ன?
- உங்களுடன் உங்களைச் சுற்றியுள்ளவர்கள் செய்து கொள்ளும் சமரசங்கள் என்ன?
- எல்லாரும் ஏற்றுக்கொண்டு இருக்கிற ஒன்றைக் கேள்வி கேட்டு மாற்ற முயற்சித்தது உண்டா? அப்படிச் செய்தபோது விளைவுகள் என்ன?
- பாலுறவின் நோக்கம் இன்பமா... இனப்பெருக்கமா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
- சுய பால் விழைவு, சிகிச்சைக்குரிய மனக்கோளாறுதான்/அப்படி இல்லை. இதில் உங்கள் கருத்து என்ன?

**பதில்கள் மற்றவர்களுக்காக அல்ல. உங்களுக்கானவை... உங்களுடையவை!**

– (அறிவோம்)

<<<Back ^Top

இக்கட்டுரை பற்றிய உங்கள் கருத்தைப் பதிவு செய்க:

Tamil English ( Tamil Typing :- amma = அம்மா , vikatan = விகடன்)

Rajalakshmi **Name**

js_raji@yahoo.com **E-Mail**

**Comment**

(Please note: Comment moderation is enabled and may delay your comment. There is no need to resubmit your comment.)

Post

| Name | Comments |
|---|---|
| Dharmarajan | இந்தியாவில் விருதுகள் கொடுக்கப்படுவதில்லை. மாறாக, 90 சதவீதத்துக்குமேலே, வாங்கப்படுகின்றன. அனைவருக்கும் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன். |
| Lohan | தர்மராசன் சொல்வது சரியே. அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளை தொடர்ந்து நோக்கும்போது அலுப்பு தட்டுகிறது. அவர்களுக்கு தங்கள் நாற்காலிகளை தக்கவைத்துக்கொள்வதே பிரதானம். |
| Dharmarajan | பேச்சைக் குறைங்கப்பா.... பேச்சைக் குறைங்க. தமிழனுக்கு பேசவில்லை என்றால், செத்து விடுவான். சரத், காரியத்தில் உறுதி காட்டுங்கள். நீங்கள், எதற்காக, ஏன் கட்சி மாறி கட்சி தாவி, பின் தனியொரு கட்சி அமைத்துக் கொண்டீர்கள் என்று, அனைத்து பாமரத் தமிழனும் அறிவான். உதார் விடுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். |
| Easan | மிகவும் உபயோகமான தொடர். நன்றி விகடன். |
| Dharmarajan | Hello Sive, I never mentioned that I'm a follower of any perticular party in India or TN. You look like adoring MK - may be his relative or friend or a DMK party man. Do you think just writing a song will resolve this issue. In his position, at his age, don't you think he should have influenced the centerl government or even threaten to revoke the support to the center if this issue is not resolved? Since he has not done any of that sort, then I can as well say that and more against him. This is not against him but to his CM chair - so who ever is sitting now will have received the same kind of comments from me. Stop writing your personal comments about me on this pages. This is the second time you are doing like this. This is not meant for that ok. So behave sensibly and write sensibly. That's what we all need here. |




www.smarter.com Feedback - Ads by Google


Copyright © 2007 Vikatan.com Contact Us